# யாழ்ப்பாணப்பல்கலைக்கழக சமுக விஞ்ஞானத்துறைசார் பட்டதாரி மாணவர்களின் நூலகப்பயன்பாடு – ஓர் ஆய்வு

நவநீதகிருஷ்ணன், சு மகிரன், சு

**ஆய்வுச்சுருக்கம்**

*[பல்கலைக்கழக நூலகங்கள் தமது நூலக சேவைகளை மேம்படுத்துவதற்கு வாசகர் பயன்பாடு தொடர்பான ஆய்வுகள் பேருதவி புரிகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமுக விஞ்ஞானத்துறைசார் பட்டதாரி மாணவர்களின் நூலகப் பயன்பாட்டின் பல்வேறு அம்சங்களை மதிப்பிடுதலை நோக்கமாகக் கொண்ட இவ்வாய்வில் மதிப்பீட்டு விவரண ஆய்வுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வினூடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகமே வாசகர்களின் முதன்மை நூலகத் தெரிவாகவும், ஆய்வுக்கான தகவல் தேடலே அவர்களின் நூலக வருகைக்கான பிரதான நோக்கமாகவும் இனங்காணப்பட்டுள்ளது. அதிகளவு வாசகர்கள் நூலகத்தில் செலவிடும் நேரஅளவு சுமார் ஒரிரு மணித்தியாலங்களாகவே உள்ளதுடன் அதிக பயன்பாட்டிற்குரிய பிரிவாக பருவஇதழ்ப் பிரிவு இனங்காணப்பட்டுள்ளது. நூலகப் பயன்பாட்டின் உச்ச நேரங்களாக காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரையிலான காலப்பகுதி காணப்படுவதுடன் அலுவலர்களிடம் வினவுவதனூடாக தகவல் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலே அதிகமான வாசகர்களின் முதன்மையான தகவல்வளத் தேடல் வழிமுறையாக இனங்காணப்பட்டுள்ளது. நூலகப்பயன்பாட்டினை அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில்* திருப்திகரமான வாசகர் கல்வி முதலிய பல வழிமுறைகளை இவ்வாய்வானது விதப்புரை செய்கின்றது]

**திறவுச்சொற்கள்:**

*தகவலறிவு, வாசகர் கல்வி, நூலகப் பயன்பாடு, பல்கலைக்கழகநூலகங்கள்*

## அறிமுகம்

இன்றைய வளர்ச்சி அடைந்து வருகின்ற தகவல் யுகத்தில் தகவல்தேவை என்பது இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. தகவல் சேவையினை வழங்கும் நிறுவனங்களாக நூலகங்கள் காணப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் நூல் நிலையங்கள் பெற்றிருந்த முக்கியத்துவங்களை விட இன்று அவை பன்மடங்கு முக்கியத்துவம் உடையவையாகக் காணப்படுகின்றன. மனிதனின் அறிவினைத் தேடும்